**தடுப்பு அளவீடுகள் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைப்பதற்கான செயற்திட்டம் - 2023**

---

தடுப்பு அளவீடுகள் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைத்தலிற்கான செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டுச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய எல் 0124 ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II (பீ) (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய பாதுகாப்பு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் அமுலாக்கல் முகவராக உள்ளது. காணி முகாமைத்துவத்துடன் ஒன்றிணைந்து கொள்கை மற்றும் பிரமாணத்தின் பௌதீக குறைவு அளவீடு மற்றும் தரமுயர்த்தலின் அமுலாக்கல் ஊடாக நிலச் சரிவுகளிலிருந்து ஆபத்து மற்றும் சேதங்களை குறைப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,396.08 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 101.3 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 14,528 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2019 யூலை 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 அபிப்பிராயம்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| இல | கணக்கீட்டு குறைபாடுகள் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 ‘‘நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்’’ இன் 88 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் கற்பனைச் சொத்துக்கள் தனியாக காட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், கணனி மென்பொருள் தனியான காட்டப்படாமல் ஆதான் பொறி மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2,921,702 | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 ‘‘நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்’’ இன் 88 ஆம் பந்தியின் பிரகாரம் கணனி மென்பொருள் கிரயம் 2024 இலிருந்து தனியாக காட்டப்படும். | நிதி நிலைமை கூற்றின் முன் பக்கத்தில் கற்பனைச் சொத்துக்களை தனியாக காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | அச்சிடல் மற்றும் காகிதாதிகளில் உள்ளடக்க வேண்டிய ரூபா 339,440 ஆன ரோனர் கொள்வனவுச் செலவினம் அலுவக உபகரண திருத்த செலவினக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. . | 339,440 | இது 2024 இல் திருத்தப்படும் | செலவனங்கள் கட்டாயமாக முறையாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 2.2. சட்டநகள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டநகள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| செயற்திட்ட கொள்வனவு கைநூலின் 118 ஆம் பிரிவு | எந்தவொரு ஒப்பந்தங்களிற்குமான முற்பணக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளகூடிய முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதம் சமர்ப்பிதாதேல செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் செயற்திட்டமானது எந்தவொரு உத்தரவாதங்களையும் பெற்றுக்கொள்ளாமல் முற்கொடுப்பனவுகளாக ரூபா 34,449,639 ஆன தொகையை செலுத்தியிருந்தது. | இலங்கை அரசாங்க கூறின் கீழ் சகல செலுத்த வேண்டியவைகளும் தீர்பனவு செய்த பின்னர் ஆண்டின் இறுதியில் ரூபா 34,449,639 ஆன சேமிப்புகள் இருந்தன இந்த நிதிகள் இலங்கை அரசாங்க கூறின் கீழ் ஏற்கனவே பூர்தியாக்கப்பட்டிருந்த வேலைகளின் எதிர்கால பட்டியல்களை தீர்ப்பதற்கு இருந்த ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்தப்பட்டதுடன் இன்று நிலுவாக இருக்கின்ற முற்கொடுப்னவு கணக்கு மீதி ரூபா 15,038,370 ஆக உள்ளது. மேலும், 2024 ஆம் ஆண்டில் சம்பளங்களை தவிர சிவில் வேலைகளிற்காக உள்நாட்டு | எந்தவொரு ஒப்பந்தங்களிற்குமான முற்பணக் கொடுப்பனவு ஏற்றுக் கொள்ளகூடிய முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதம் சமர்ப்பிதாதேல |

| | | |
|---|---|---|
| | | நிதிகள் பெறப் பட்டிருக்கவில்லை. ஆகவே, 2023 ஆம் ஆண்டின் ரூபா 34,449,639 தொகையான சேமிப்புகள் 2024 ஆம் ஆண்டுடன் தொடர்பான சில செலவினங்களை செய்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| 2023 மார்ச் முதல் ஆகஸ்ட் வரை ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 164,670,815 தொகையான 53 பட்டியல்களிற்கான கொடுப்பனவு 2023 ஒக்தோபர் வரை தாமதப்பட்டிருந்தது. இதன் விளைவால் ஆண்டின் போது ரூபா 2,036,306 ஆன தாதக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக உள்நாட்டு நிதிகள் பெறுதல் இலங்கையில் நிலவிய பொருளாதார சிக்கல் காரணமாக அக்காலத்தின் போது உள்நாட்டு நிதிகள் கிடைப்பதில் தாமதப்பட்டிருந்தது. ஆகவே, கொடுப்பனவு பட்டியலின் 16 சதவீத பகுதி மாத்திரமே தாமதப்பட்டிருந்தது. இதன் விளைவால் ரூபா 2,036,306 ஆன தாமதக் கட்டணங்கள் ஒப்பந்தகாரரின் வேண்டுகையில் ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளின் அடிப்படையில் செலுத்தப்பட்டது. | தாமதமில்லாமல் கொடுப்பனவு செய்ய வேண்டும். |

**3.2 வேலைத்தள வருகைகளின் போது செய்யப்பட்ட அவதானிப்புகள்**

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கலபாத வேலைத் தளத்தில் 90 மிமீ சுற்றளவுடைய குழாயை குறிப்பிடப்பட்டு வரலாற்று ரீதியான அணைக் கட்டிற்காக ரூபா 2,824,560 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதேநேரம் பௌதீக பரிசோதனையில் குமாயினுடைய சுற்றளவு 77 மிமீ ஆக உள்ளதென அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், ஒப்பந்தகாரருக்கு குறிப்பிடத்தக்களவு பணம் மேலதிகமாக செலுத்தப்பட்டது. | குழாயின் சுற்றளவு நிலக் கீழ் நீரை வெளியேற்றுவதற்கு வேண்டப்பட்ட பாய்ச்சல் வடிவமைப்பு மற்றும் ஒப்பந்தத்தின் பகுதியிலுள்ள 702.3 இன் தொழில்நுட்ப விதப்புரைகள் என்பவற்றின் பிரகாரம் தெரிவுசெய்ய வேண்டியிருந்தது. விதப்புரைகள் சுற்றள தெரிவு செய்வதற்கு குறிப்பிடப்பட்டிருக்காததினால் இத தொடர்பான திடம்மிடல் பிரிவுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. குழாயின் சுற்றளவாக வெளிவாரி சுற்றளவை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, இது வரலாற்று ரீதான அணைக்கட்டிற்கு குழாய்களின் வெளிச் சுற்றளவை பயன்படுத்துவதற்கும் மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட 90 மிமீ சுற்றளவு மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின் | BOQ இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரகாரமும் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி மேற்குறிப்பிட்டவற்றிற்காக பரீட்சிக்கப்பட்ட குழாய்களின் வெளிச் சுற்றளவு 90 மிமீ ஆக இருந்ததுடன் மாதிரிகள் செயற்திட்டத்தின் பொருட்களிற்கான பொறியியலாளருக்கும் அனுப்பப் பட்டடதுடன் பயன்படுத்தவதற்கு முன்னர் முன்னனுமதயும் பெறப்பட்டது. ஆகவே, ஒப்பந்தகாரருக்கு குறிப்பிடத் தக்களவு பணம் மேலதிகமாக செலுத்தப்பட்டவில்லை. | |
| (ஆ) | துருகடகந்த வேலைத்தளத்தில் காபன் கிணறுகளின் துகைளிற்குள் கருங்கற்களை நிரப்பும் போது பெரிய கற்றகிள்றிகிடையில் இடைவெளி இருந்தன. இயற்கையான மலைகளிற்குள் கிணறுகளை வடிவமைப்பதற்கு முன்னர் இன இன்னொரு நிலச்சரிவு ஏற்படுமாயின் இடைவெளி ஊடாக நிலவெடிப்பிற்கான சாத்தியம் உள்ளன, ஆதலால் செயற்திட்டத்தின் நோக்கம் அடையப்படவில்லை. | மேற்குறித்த வேலைத்தளத்தில் காபன் தடைச்சுவர் நிர்மாணிக்கும் போது குறிப்பிடப்பட்ட நியமத்தின் பிரகாரம் காபன் பெட்டிகள் நிரப்பட்டது. ஆனால், கற்கள் விநியோகிக்கப்பட்ட பின்னர் உட்பகுதியில் பல பெட்டிகள் அகற்றப்பட்டன. நாங்கள் ஒப்பந்தகாரருடன் கலந்துரையாடி இதனை திருத்தவதற்கு படிமுறைகள் எடுக்கப்படுவதுடன் இருக்கின்ற தடைச் சுவரின் உறுதித்தன்மை பாதிக்கப்பட்டிருக்கவிலை | செயற்திட்டமானது நோக்கங்களை அடைவதற்கு கவனம் செலுத்த வேண்டும் |
| (இ) | கரன்தொல வேலைத்தளத்தில் வெடிப்பேற்பட்ட கால்வாயின் சில பகுதிகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டதுடன் கால்வாய் அழிவடைந்திருந்தது. அதேநேரம் தரைகள் முழ்கியிருந்தது. | மேற்குறித்த நிலைமை முறையான வழியில் அந்த வைலைத் தளத்திற்கு சொந்தமான காணிகளின் பராமரிப்பின்மை காரணமாக எழுந்தது. செயற்திட்ட முகாமைத்துவ் பிரிவு மேற்குறித்த இடங்களின் காலரீதியான பராமரிப்பிற்கான தேவையை இனங்கண்டிருந்தது. இதன்படி இது தொடர்பில் பங்குதாரர் / சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பதிலைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பராமரிப்பு முறையாக செய்ய வேண்டும். |